| **அனுப்புநர்** | **பெறுநர்** |
|---|---|
| திருமதி.க.சசிகலா,<br>இயக்குநர்,<br>அரசுத்தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | 1. இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.<br>2. முதன்மைக் கல்வி அலுவலர்,<br>அனைத்து மாவட்டங்கள்.<br>3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்),<br>அனைத்து மாவட்டங்கள்.<br>4. அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்,<br>அனைத்து மாவட்டங்கள். |

**ந.க.எண். 005885 / பி1 / 2026** **நாள் : 25.05.2026**

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள்:** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு, ஜூலை–2026 – பள்ளி மாணவர்கள் பள்ளிகள் மூலமும் / தனித்தேர்வர்கள் சேவை மையங்கள் (Service Centers) மூலமும் ஆன்–லைனில் விண்ணப்பித்தல் மற்றும் அறிவியல்பாட செய்முறைத் தேர்வு பயிற்சி வகுப்பிற்கான விண்ணப்பித்தல் – பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்கக் கோருதல் – தொடர்பாக.

**பார்வை :** 1. அரசாணை (நிலை) எண்.63, பள்ளிக் கல்வித் (அ.தே.) துறை, நாள்.04.03.2024
2.இவ்வலுவலக செய்திக்குறிப்பு நாள்: .05.2026

******

நடைபெறவிருக்கும் ஜூலை–2026, பத்தாம் வகுப்பு துணைத் தேர்வெழுத ஆன்–லைன் வழியாக விண்ணப்பிப்பதற்கு **26.05.2026 முதல் 06.06.2026 வரையிலான நாட்களில் (ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு விடுமுறை நீங்கலாக) காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்** பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிக்கும் / தனித்தேர்வர்கள் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களுக்கும் (Service centers) நேரில் சென்று விண்ணப்பிக்கவேண்டும் எனவும், மேற்குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள் **சிறப்பு அனுமதித் திட்டத்தில் (தக்கல்)** 09.06.2026 **மற்றும்** 10.06.2026 ஆகிய தேதிகளில் ஆன்–லைனில் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(**அரசாணை (நிலை) எண்.63, பள்ளிக் கல்வித் (அ.தே.) துறை நாள்:04.03.2024–ன்படி, மார்ச்/ஏப்ரல்–2026–ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் முழுமையாக அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயின்று தேர்ச்சிப்பெறாத/வருகை புரியாத மாணவர்களுக்கு சிறப்பு அனுமதிக் கட்டணம் ரூ.500/– விலக்களிக்கப்படுகிறது)**

ஜூலை–2026 பத்தாம் வகுப்பு துணைத் தேர்வெழுத விண்ணப்பிக்கும் தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்வது தொடர்பாக சேவை மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் ஆகியவை இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்கள் **26.05.2026** முதல் விண்ணப்பித்திட வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோரின் விண்ணப்பங்களை ஆன்–லைன் மூலம் பதிவேற்றம் செய்திட தங்களது ஆளுகைக்குட்பட்ட பள்ளிகள் / சேவை மையங்களின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை)களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. **26.05.2026 காலை 11 மணி முதல்** பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிக்கும் / தனித்தேர்வர்கள் சேவை மையங்களுக்கும் வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோரிடம் உரிய ஆவணங்களைப் பெற்று அவற்றை ஆய்வு செய்து www.dgeapp.tnschools.gov.in என்ற website–ல் பள்ளிகள் / சேவை மையங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி, தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
2. பத்தாம் வகுப்பு தேர்வர்களுக்கான அறிவுரைகள், தேர்வுக்கால அட்டவணைகள் ஆகியவற்றை மேற்காண் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து சேவை மையங்களின் அறிவிப்பு பலகையில் ஒட்டவேண்டும்.
3. தேர்வர்களின் விண்ணப்பங்ளை பெற்று பதிவேற்றம் (Uploading) செய்த பின்னர், Report Section–ஐ Click செய்து தேர்வர் வகை வாரியான விவரங்களையும், கட்டணம் தொடர்பான விவரங்களை 06.06.2026 அன்று பதிவிறக்கம் (Downloading) செய்ய வேண்டும்.
4. பின்னர் அதனடிப்படையில் விண்ணப்பிக்க வருகைபுரிந்த தேர்வர்களிடமிருந்து பெறப்பட்ட தொகையினை,
   - (i) தேர்வு விண்ணப்பங்களுக்கான கட்டணம் (SSLC supplementary Exam Application Amount), **(தக்கல் கட்டணம் உட்பட)**
   - (ii) பத்தாம் வகுப்பு தேர்விற்கான ஆன்–லைன் கட்டணமாக தொகை (SSLC On–line Fees)

   என 2 வகைககளாக தனித்தனியாக பிரித்து, அதனை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் கட்டணத்தினை செலுத்திட வேண்டும். **அரசாணை(2டி) எண்.42, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள்.11.04.2023–ன்படி, சேவை மையங்களுகான**

**சேவை கட்டணம் ரூ.70/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது, இதில் ரூ.35/-ஐ சேவை மையங்களுக்கான சேவைக்கட்டணங்கள் மற்றும் பராமரிப்பு செலவினங்களுக்காக வைத்துக் கொண்டு, மீதமுள்ள ரூ.35/-ஐ அரசு கணக்குத் தலைப்பில் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.**

5. இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி கீழ்க்காண் கணக்கு தலைப்பு மற்றும் துறை விவரங்களை பயன்படுத்தி தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்-லைன் கட்டணத்தினை செலுத்திட வேண்டும்.

| | |
|---|---|
| District | PAO (South) Chennai |
| Department receiving receipts | 04304 Directorate of Government Examinations |
| DDO Name | 41010118 Accounts Officer |
| கணக்குத் தலைப்பு | 0202 01 102 AA 22713-Examination Fees<br>0202 01 102 AA 22799- Others |

6. மேற்கண்டவாறு தேர்வர்களின் தேர்வுக் கட்டண தொகை மற்றும் ஆன்-லைன் கட்டணத்தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt மற்றும் தேர்விற்கு விண்ணப்பித்த மாணவர்களின் விண்ணப்பங்கள் (உரிய இணைப்புகளுடன்) ஆகியவற்றினை **12.06.2026-க்குள்** சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் சார்ந்த உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் / சேவை மையங்களின் தலைமை ஆசிரியர் நேரில் ஒப்படைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. மேலும், சேவை மையங்களிலிருந்து பெறப்படும் தனித்தேர்வர்களின் விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் தேர்வு கட்டணம் செலுத்தப்பட்ட செலுத்துச் சீட்டு ஆகியவற்றை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் பெற்று தங்கள் வசம் வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் தெரிவிக்கப்படும் நாட்களில் துணை இயக்குநர் (பொது) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கத் தெரிவிக்கப்படுகிறது.

8. விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பான சந்தேகங்கள் ஏதேனும் இருப்பின், அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களை தொடர்பு கொள்ள வேண்டும் எனவும் சேவை மையங்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**9. செய்முறைத் தேர்வு பயிற்சி வகுப்பிற்கான விண்ணப்பித்தல் தொடர்பாக அறிவுரைகள்:**

ஜூலை-2026 பத்தாம் வகுப்பு துணைத் தேர்விற்கு 26.05.2026 முதல் 09.06.2026 வரையிலான நாட்களில் அறிவியல் செய்முறைத் தேர்வு பயிற்சி வகுப்பிற்கு பதிவு செய்ய வரும் தேர்வர்களில் **கருத்தியல் பாடங்கள் அனைத்திலும் தேர்ச்சிப் பெற்று அறிவியல் செய்முறைத் தேர்வை மட்டும் எழுதவுள்ள தேர்வர்களும்,** (தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு பெற்றிட) கருத்தியல் தேர்விற்கு சேவை மையங்களில் விண்ணப்பிக்கும் நாட்களில் 26.05.2026 முதல் 09.06.2026 வரை செய்முறை பயிற்சி வகுப்பிற்கு விண்ணப்பித்த ஒப்புகைச்சீட்டை காண்பித்து அறிவியல் பாட கருத்தியல் தேர்விற்கு விண்ணப்பிக்க தேர்வர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) தங்கள் அலுவலகங்ளளில் நேரடி தனித்தேர்வர்களை விடுத்து ஏற்கனவே தேர்வெழுதியவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களை ஆய்வு செய்து அறிவியல் பாட செய்முறைத்தேர்வில் வருகைபுரியாதவர்கள் **மற்றும் தேர்ச்சி பெறாதவர்களுக்கு மட்டுமே** செய்முறை பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள அனுமதித்தல் வேண்டும். மேற்காண் பொருள் மீது மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) தனிக்கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஒம்/-**
**இயக்குநர்**

**இணைப்பு :**

1. சேவை மையங்களுக்கான அறிவுரைகள்
2. தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்-லைன் கட்டணங்கள் செலுத்தும் வழிமுறைகள்
3. பத்தாம் வகுப்பு தனித் தேர்வர்களுக்கான அறிவுரைகள்.
4. அறிவியல் செய்முறைத் தேர்வு பயிற்சி வகுப்பிற்கான விண்ணப்பம் மற்றும் அறிவுரைகள்.

**நகல்:**

1. மாநில திட்ட இயக்குநர்,ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6
2. உறுப்பினர் செயலர், மாதிரிப்பள்ளிகள், சென்னை-6
   -தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6
4. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை-6
   - தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
5. அ3, பி2,பி3,பி4 பிரிவுகள், அலுவலகம்.